REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5| சென்னை: ஆடி 1உ செவ்வாய் (16—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 2உ புதன் (17—7—57) [இதழ் 26

வேலையில்லாக் கொடுமை அதிகரித்திருக்கிறது!

புதுடில்லி, ஜூலை 16—

"கடந்த ஐந்தாண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்குக் குறைந்தது என்பதுபற்றிப் போதுமான புள்ளிவிவரங்கள் இல்லை! வேலை வாய்ப்புகளும் அதிகரித்திருக்கின்றன; அதே நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்திருக்கிறது" என்று மத்திய தொழிலாளர் இலாகா உதவி மந்திரி அபீத் அலி, மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

சட்டத்தின் பின்னுல் ஒளிந்து கொண்டிருக்கும்

தேசத் துரோகிகளை நாட்டுக்குக் காட்டிக்கொடுப்போம்

நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அல்ல — தாய்த் திருநாட்டின் விடுதலை வீரர்கள்

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் அயர்லாந்துப் பிரதிநிதிகள் ஆற்றிய பணியே எங்களது சட்டசபைப் பணியும்

குறைபாடுடைய புள்ளிவிவரங்களை பெருமையாக எண்ணுதீர்

கோகலே மண்டபத்தில் அண்ணு விரமுழக்கம்

"நாங்கள் சட்ட சபையில் சாதாரண சட்டசபை உறுப்பினர்களாக அமர்ந்திருக்க வரவில்லை; நாங்கள், சட்ட சபையில் இடம் பெற்றிருக்கும் தாயக விடுதலைப் போராட்ட வீரர்கள்; நாங்கள் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து கொண்டிருப்பதற்காகச் சட்டசபைக்குச் செல்லவில்லை; சட்டத்திற்குப் பின்னுல், ஒளிந்து கொண்டிருக்கும் தேசத் துரோகிகளை நாட்டுக்குக் காட்டிக் கொடுக்கவே சட்ட சபைக்குச் சென்றிருக்கிறோம்"

என்று, அண்ணு அவர்கள், கடந்த சனியன்று கோகலே மண்டபத்தில் பேசுகையில் முழக்கமிட்டார்கள்.

தொடர்ந்து அண்ணு அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"நாம், இதுவரையில் சட்டசபையில் ஆற்றியுள்ளபணி நமக்கு நல்ல நம்பிக்கையும், திருப்தியும் தருவதாகும். ஏறத்தாழ 200 பேருக்கும் அதிகமாகக் கூடியுள்ள அந்த சட்ட சபையில் நாம் 15 பேர் தான்; ஆனுலும், நாம் எடுத்துரைக்கும் கருத்துக்களை எவரும் அலட்சியப் படுத்திவிடுவதில்லை. சிலர் நம்மிடம் அருவருப்புக் காட்டுகிருர்கள் என்ருல், அது அவர்களின் சுபாவம் அப்படி என்பதினுலே தவிர, வேறெதினுலுமல்ல!

"நாம் சட்ட சபையில் மேடைப் பேச்சுப் போலப் பேசுவதாக மந்திரி சுப்பிரமணியம் குறைப்பட்டுக் கொண்டார்; அவர், நாம் மேடைப் பேச்சுப் பேசுவதாகக் குற்றம் கூறுவதற்குக் காரணம், நாம் பேசும் இந்த முறை, உள்ளத்தைக் தொடுவதாக இருக்கிறது; ஆனுல், அமைச்சர் விரும்புகிற புள்ளி விவரப் பேச்சுக்கள் உள்ளத்தைத் தொடாது.

"நாம் இப்போது சட்டசபையில் ஆற்றுகிற பணி எத்தகையது என்ருல், இங்கிலாந்து நாட்டுடன் அயர்லாந்து இணைக்கப்பட்டிருந்த காலத்தில், இங்கிலாந்து பாராளுமன்றத்தில் அயர்லாந்துப் பிரதிநிதிகள் ஆற்றிய பணி போன்றதாகும்.

"அயர்லாந்து அடிமைப்பட்டிருந்தது; அந்தத் தாயகத்தின் விடுதலைக்காக அயர்லாந்து பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், ஆதிக்க புரியினரை முன்வைத்துக் கோண்டு வாதாடினுர்கள்; விடுதலை கோருவதன் காரணங்களை விளக்கிச் சோன்னுர்கள். அதேபோலத்தான் நாமும், தாய்த் திருநாட்டின் விடுதலைக்காகப் பணியாற்றுகிறோம், அந்த முறையில் சட்டமன்றத்திலும் பேசுகிறோம்.

"மேலும் புள்ளி விவரத் தயாரிப்பு நமது நாட்டில் குழந்தை பருவத்தில்தான் இருக்கிறது; இந்தப் புள்ளி விவரம் சேகரிக்கும் முறையில் குறைகள் பல இருக்கின்றன.

"இந்த குறைபாடுடைய புள்ளி விவரங்களை அள்ளித் தருவது சர்க்காருக்குச் சாத்தியமானதாயிருக்கலாம். நிர்வாக இயந்திரம் இருக்கிறது; ஆனுல், இந்தப் புள்ளிவிவரம் தருவதைப் பெரிய பெருமையாக மந்திரிமார்கள் கருதுவார்களேயானுல், அதற்காக நான் இறக்கப்படுகிறேன்.

"நாங்கள் சட்டசபைக்கு வந்திருப்பது, மந்திரிகளின் பாராட்டுதலைப் பெறுவதற்காக அல்ல; இந்தப் பாராட்டினைப் பெற வேண்டிய பஞ்ச நிலையிலிருப்பவர்களும் அல்ல!

"சுப்பிரமணியம் சொன்னுர்- இனி ஒரு பிரிவினைக்கு நாங்கள் சம்மதிக்க மாட்டோம்,' என்று!

"இனி ஒரு பிரிவினைக்கு என்னும்போது, 'ஏற்கனவே ஒரு பிரிவினைக்குச் சம்மதித்தவர்கள் தானே இவர்கள்?' என்றுத்தான் எங்களுக்கு நினைக்கத் தோன்றுகிறது!

"இப்பொழுது வேண்டாம்; இன்னும் பத்து ஆண்டுகள் பொறுத்து திராவிடநாடு பற்றிப் பேசலாம், சிந்திக்கலாம்,' என்று கூறினர், சுப்பிரமணியம்!

"'இப்பொழுதுதானே வேண்டாம் என்கிருர்,'—என்று எண்ணத்தான் நமக்குத் தோன்றுகிறது!

"நமக்குமட்டுமல்ல- வடநாட்டிலிருந்து வரும் 'அமிர்த பஜார்,' பத்திரிகைக்கும் அந்த எண்ணமே வருகிறது.

"அது நமது இயக்கம் பற்றியும் சுப்பிரமணியத்தின் பதில் பற்றியும் 'ஆபத்தான இடம்,' என்று தலைப்பிட்டு தலையங்கமே எழுதியிருக்கிறது!

"சட்ட சபைக்குச் சென்று என்ன சாதிக்கப் போகிருர்கள் என்றுர்களே, அவர்களுக்குக் கூறுவேன்—'கடற்கரையில் இலட்சோபலட்சம் பேர்களைக் கூட்டி வைத்துச் சொன்னேம்; தினம் தினம் பல்லாயிரம் மக்களிடம் பேசுகிறோம்; மந்திரிமார்களும் பதிலளிக்கவில்லை; வடநாட்டுப் பத்திரிகைகளும் எழுதவில்லை. இப்போது நாம் சட்டசபையில் பேசுகிறோம்— இப்போதுதான் வடநாட்டுப் பத்திரிகை நம்மைப் பற்றி எழுதுகிறது'—என்று!

"மந்திரி சுப்பிரமணியத்திற்குக் கூறுவேன்—'புள்ளிவிவரங்களைப் பெரிதாக நாங்கள் நினைக்கவில்லை; நாங்கள் தாயக விடுதலையையே பெரிதென மதிக்கிறோம்; அதற்காகவே சட்ட மன்றம் வந்துள்ளோம்'—என்று!"

'போலீசாரின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 100 ஆக வேண்டும்'

சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி, எம். பி. சாரதி கோரிக்கை

சென்னை, ஜூலை 15—

போலீஸ் கான்ஸ்டபிள்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் மாதம் ரூ. 100 ஆக இருக்கவேண்டும் என்று சட்டசபையில், போலீஸ் மானியக் கோரிக்கை பற்றிப் பேசுகையில் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தோழர் எம். பி. சாரதி அவர்கள் பேசும்போது, ரிசர்வ் போலீசாரின் வாழ்க்கை மிகக் கேவலமானதாக இருப்பதாக எடுத்துரைத்து, 'அவர்களுக்கு அதிக வசதிகள் செய்து தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி மேலும் குறிப்பிட்டதாவது :—

"போலீசாருக்குத் தரப்படும் பிரயாணப் படி போதுமானதாக இருக்கவில்லை; அதனை அதிகரிக்கவேண்டும். போலீசாருக்கு நல்ல வீடுகள் கட்டித்தரவேண்டும். மேலும், மலபார் நம்மிடமிருந்து பிரிந்து சென்ருன பிறகு, மலபார் போலீசுக்கு அவசியமில்லை; அதற்குப் பதிலாக இந்த மாநிலத்திலிருந்து ஆட்களைப் பொறுக்கி ஒரு விசேடப் போலீஸ் படை வைத்துக்கொள்ளலாம்.

"மேலும், கூட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் போலீசாரின் கெடுபிடிகள் குறையவேண்டும்."

தோழர் எம். பி. சாரதி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"போலீஸ் படைக்கு ஆள் சேர்ப்பதை, 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' பொறுப்பில்விட வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

"மதுவிலக்குச் சட்டத்தால் ஏராளமானவர்கள் குடிப் பழக்கத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்று கூறுவது தவருன கருத்தாகும்."

17 இலட்சம் செலவில் சமுதாய விஸ்தரிப்புத் திட்டம்

சென்னை, ஜூலை 16—

நடைபெற்ற நான்கு ஆண்டு காலத்தில் கீழ்பவானி திட்டப் பகுதியில் இதுவரை ரூ. 17,20,000 செலவிடப்பட்டுள்ளது என்றும், சமுதாய விஸ்தரிப்புத் திட்டங்களின் நடைமுறைக்காக ரூ. 7,74,000 செலவிடப்பட்டுள்ளது என்றும், இதுவரை அமைக்கப்பட்ட சாலைகள் எதுவும் மழையின் காரணமாகப் பழுதாகவில்லை என்றும் சட்ட சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

'திராவிடப் பிரிவினையை நான் ஆதரிப்பதாகாது'

'கொள்கைக்கு முரணுக பேசவில்லை'

சட்டசபையில் நிதி அமைச்சர் கூறுகிருர்

சென்னை, ஜூலை 16—

வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம், திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தி வரும் தி. மு. கழகம் இன்னும் குறைந்தது 10 ஆண்டுக்காலம் செயலற்று இருக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டதைப் பற்றி, இன்று சட்டசபையில் ஒழு ஒழுங்குப் பிரச்சினை கொண்டுவரப் பட்டது.

நிதி அமைச்சர் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை மறைமுகமாக ஆதரித்துவிட்டாராம்! இது இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாம்!

'இவ்வாறு நிதி அமைச்சர் பேசியது ஒழுங்காகுமா?' என்று காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவைச் சேர்ந்த டி. எஸ். இராமசாமிபிள்ளை இன்று சட்டசபையில் கேள்வி எழுப்பினர். (4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 16—7—57 செவ்வாய்

சர்க்கார் கடமை!

கேவலமான சம்பிரதாயங்களை அடுக்கடுக்காக உருவாக்கி வருகின்றனர், டெல்லி சர்க்காரும், மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் ஆளவந்தார்களும்! அவற்றுள் ஒன்றுதான், சர்க்கார் ஊழியர்களில், எந்தத் துறையிலிருப்பவரேனும் தங்கள் குறைகளை வேலை நிறுத்தம் போன்ற கிளர்ச்சி ரூபத்தில் வெளிக்காட்டினாலன்றி, அந்தக் குறைகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்பதாகும்.

டெல்லியின் நிர்வாகத்தில் உள்ள தபால்-தந்தி இலாகா ஊழியர்கள் தங்கள் குறைகளை விளக்கி, முப்பது அம்சங்களடங்கிய கோரிக்கை மனு ஒன்றினை சர்க்காரிடம் தந்து இரண்டு ஆண்டுகளுக்குமேலாகி விட்டது; ஆனால் அந்த மனு குறித்து, கடந்த மாதம் வரையில் பொறுப்பான பதில் ஏதும் தர முன்வரவில்லை, சர்க்கார்.

ஊழியர்களும் கோரிக்கைகளை வற்புறுத்தி மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றினர்; கருப்புச் சின்னங்கள் அணிந்து வேலை செய்தனர்; கோரிக்கை வாரம் கொண்டாடினர்; என்றாலும், சர்க்கார் வாய்மூடிக் கிடந்தது. இந்தப் பிடிவாதப் போக்கு நீடிப்பதைக் கண்ட தபால்—தந்தி ஊழியர்கள், வேலைநிறுத்தம் செய்வது என்று முடிவு செய்துசர்க்காருக்குஎச்சரிக்கை தந்த பின்னர்தான், கோரிக்கைகளைப் பற்றி பேசுவதற்கே டெல்லிப் பெரியவர்களுக்கு மனம் வருகிறது.

இந்தக் கேவலமான சம்பிரதாயத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும், வெகு விவேகமான நடைமுறை என்று டெல்லி கருதுகிறது.

இந்த நடைமுறையையே மாநில சர்க்கார்களும், குறிப்பாக சென்னை மாநில சர்க்காரும் கடைப்பிடித்துவருகின்றனர்.

ஊழியர்கள், குறைகளைத் தெரிவிக்கும்போது பிடிவாதம் காட்டுவதும், அதன் மூலம் ஊழியர்களை நேரடி நடவடிக்கையிலீடுபடுமாறு துரத்திவிட்டு, அப்படி நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறிவிக்கும்போது அவர்களைக் கண்டிப்பதும், பின் இறங்கிவந்து, 'ஏதோ ஊழியர்களிடத்தில், அளவு கடந்த அபிமானம் கொண்டவர்கள்போல நடிப்பதும்' தேசிய சர்க்கார் என்று பெயர் பூண்டவர்கள் கையாளக் கூடிய கௌரவமான வழியா என்பதை இந்த காங்கிரஸ் ஆளவந்தார்கள் சிந்தித்தாக வேண்டும்.

துறைமுகத் தொழிலாளர்களும், நேரடி நடவடிக்கை என்ற அறிவிப்பிற்குப் பிறகுதான் சர்க்காரின் கவனத்தைக் கவர முடிந்திருக்கிறது.

சர்க்காரின் இந்த நடைமுறையினால்தான், தபால்-தந்தி ஊழியர்கள், வரும் ஆகஸ்டு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கின்றனர். அவர்களைப் போலவே, விமானப் போக்குவரத்து இலாகா ஊழியர்களும் நேரடி நடவடிக்கைக்கு உத்தேசித்திருக்கின்றனர்.

தபால்-தந்தி இலாகா ஊழியர்களின் கோரிக்கைகளைக் குறித்துப் பேசுகையில் — வேலை நிறுத்த அறிவிப்புக்குப் பிறகுதான் — மந்திரி லால்பகதூர் சாஸ்திரியார், அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம் என்றும், முதல்வகைக் கோரிக்கைகளை— அதாவது, பஞ்சப்படியை உயர்த்துவது; பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துத் தருவது; இரண்டாவதுசம்பளகமிஷன்அமைப்பது போன்ற கோரிக்கைகளைக் கவனிப்பதற்கு இல்லை என்றும், இரண்டாவது வகைக் கோரிக்கைகளை 'பார்க்கலாம்,' என்றும் கூறியிருக்கிறார். இன்று 'ஊழியர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகிறேன்' என்கிறார், மந்திரி!

இரண்டு ஆண்டுகளாகிவிட்டன, ஊழியர்கள் கோரிக்கைகளைத் தெரிவித்து! 'ஊழியர்களைச் சந்தித்துப் பேசுவோம்,' என்ற ஞானோதயம் பிறக்க இரண்டாண்டுக் காலமும் ஊழியர்களின் நேரடி நடவடிக்கை அறிவிப்பும் தேவைதானா?

இன்று கோரிக்கைகளின் குணம்சங்களை வகைப்படுத்தி வியாக்கியானம் செய்யும் மந்திரியார், இதனை கோரிக்கை வெளியிடப்பட்ட காலத்திலேயே ஊழியர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்காதது ஏன்? நமக்கு விளங்கவில்லை.

பிடிவாதம் காட்டுவதும், பின்னர் ஊழியர்மேல் பழி போடுவதும் நல்லதல்ல!

தபால்-தந்தி இலாகா, மற்றும் விமானப் போக்குவரத்து இலாகா ஊழியர்களின் கோரிக்கைகளை அனுதாபத்தோடும், நல்லுணர்ச்சியோடும் ஆராய்ந்து ஊழியர் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி, சாக்குப்போக்கு கூறுவதைவிடுத்து நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்குவதின் மூலம், உத்தேசிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கு டெல்லிப் பெரியவர்கள் முன்வரவேண்டும்.

நவீன ஆயுதங்களின் முன்னேற்றம்

ஆண்டுகள் செல்லச் செல்ல நவீன ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞான முன்னேற்றத்தினால் இந்த ஆயுதங்களுள் சில மனித சக்திக்கும் அப்பாற்பட்ட முறையில் இயங்கத் தொடங்குகின்றன.

அதிவிரைவான இந்த இயக்கத்திற்கு மனித சக்தி ஈடுகொடுக்க முடியுமா என்பது விஞ்ஞானிகளின் பிரச்சினையாயிருந்து வருகின்றது.

கிரகங்களுக்கிடையே பறப்பதற்கு இப்பொழுது முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. கிரகங்களுக்கிடையே பறக்கும் முயற்சியில் மனிதன் எந்த முறையில் தனது திறமைகளைப் பயன்படுத்தி வெற்றி காணமுடியும் என்பது பற்றி அமெரிக்க விமானப்படை ஆராய்ந்துவருகின்றது.

'ஆங்கிலத்திற்குப் பதில் தமிழே போதனு மொழியாக வேண்டும்'

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கருத்து

சென்னை, ஜூலை 15—

அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமலே, பல்கலைக் கழகச் சட்டத்திற்குத் திருத்தம் செய்து, ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழைப் போதனு மொழியாக சென்னைப் பல்கலைக் கழகம் ஆக்கும் எனத் தாம் நம்புவதாக சென்னை சட்டசபையில், கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறினார்.

"மாணவரை மட்டுமின்றி அரசாங்கத்தையும் எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகும்; இது சம்பந்தமாக அவசியமான நடவடிக்கையை எடுப்பதற்கு பல்கலைக் கழகம் தவறாது என நம்புகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

★

'ஆங்கிலமே நீடிக்கவேண்டும்'

செட்டிநாட்டரசர் கூற்று

கோவை, ஜூலை 15—

"இன்னும் நீண்ட காலத்திற்குக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடமொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும். நாடு முன்னேற வேண்டுமானால் விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் போன்ற பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படவேண்டும். உலகம் முழுவதிலும் ஆங்கிலம் பரவியுள்ளது. மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லும் நமது மாணவர்களுக்கு ஆங்கிலத்தின் உதவி மிகத் தேவை. ஆங்கிலத்தின் உதவியில்லாமல் நல்ல மருத்துவர்களையும், பொறிஇயல் வல்லுநர்களையும், விஞ்ஞானிகளையும் உற்பத்தி செய்ய முடியாது"

என்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தரான திரு. எம். ஏ. முத்தையாச் செட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

லோகியாவின் இந்தி வெறி!

பம்பாய், ஜூலை 15—

"கிளைவ் பிரபுவின் புத்திர பௌத்திரர்கள்தான் ஆங்கிலத்தில் பேச வேண்டும்; காந்தியாரின் புத்திர பௌத்திரர்கள் அல்ல" என்று, சோஷலிஸ்டு தலைவர் லோகியா கூறியிருக்கிறார்.

இங்கு கூட்டம் ஒன்றில் அவர் இந்தியில் பேசத் துவங்கியதும், சிலர், ஆங்கிலத்தில் பேசுமாறு அவரைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறிவிட்டு, இந்தியிலேயே தொடர்ந்து பேசினாராம்!

ஹோ சி-மின் இந்தியா வருகிறார்!

புதுடில்லி, ஜூலை 15—

வியட்நாம் குடியரசுத் தலைவர் டாக்டர் ஹோ சி-மின் இந்த ஆண்டு மாரிக் காலத்தில் இந்தியாவுக்கு வருகை தருவார் என்று தெரியவருகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் அவர், தாயகம் திரும்பும் வழியில் இந்தியா வரக்கூடும் என்றும், டெல்லி சர்க்கார் அவரை அழைத்திருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது.

மாலடோவிற்கு புதிய பதவி?

மாலடோவ், அர்ஜெண்டைனா நாட்டிற்கு ரஷ்யாவின் தூதுவராக அனுப்பப்படலாம்!

இப்படி ஒரு செய்தியை பிரஞ்சுப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் ரஷ்ய வெளிவிவகார மந்திரியாயிருந்த மாலடோவ், அண்மையில் கட்சித் தலைமையிலிருந்து துரத்தப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இவருக்கு இப்படி ஒரு தூதுவர் பதவி தருவதாக ரஷ்ய சர்க்கார் தெரிவித்திருப்பதாக அந்தப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

'அடிமைகளாகாதீர்'

ஆசிரியர்களுக்கு விநோபா அறிவுரை

கோழிக்கோடு, ஜூலை 15—

"ஒரு மாநிலத்தில், பதவியிலிருக்கும் ஒரு அரசியல் கட்சி தயாரிக்கும் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதுதான் ஆசிரியர்களின் வேலை என்றால் அவர்கள் அடிமைகள் நிலைக்குத் துரத்தப்படுவதாகும்; ஆசிரியர்கள் இதனை அனுமதிக்கக் கூடாது"

என்று, ஆச்சாரியா விநோபா அவர்கள், ஆசிரியர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

240 திட்டங்கள் நிறைவேறியதாம்

மத்திய அமைச்சரின் பெருமிதம்

ஐதராபாத், ஜூலை 15—

நந்தி கொண்டாவில், ரூ. 122 கோடி செலவில் நிர்மாணிக்கப்படவிருப்பதும், உலகிலேயே இரண்டாவது பெரிய நீர்த்தேக்கமானதுமான நாகார்சுனசாகர் திட்டத்தின் அணைக்கட்டிற்கான கால்கோள் விழாவை மத்திய நீர்ப்பாசன—மின்சார அமைச்சர் எஸ். கே. படீல் ஆற்றிவைக்கையில், பத்தாண்டுக்கால சுதந்திர ஆட்சியின் சாதனைகளைப் பெருமிதத்தோடு கூறுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஆறுகள், பள்ளத்தாக்குகள் ஆகிய திட்டங்களுக்காக இதுவரையில் சுமார் ரூ. 1,500 கோடி செலவிடப்பட்டிருக்கிறது; 240 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; 63 இலட்சம் ஏக்கரா நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டிருக்கிறது; இவற்றின் காரணமாக ரூ. 250 கோடி பெறுமானமுள்ள உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது"

இந்தியாவுக்கு மேலும் 9-கோடி டாலர் கடன்!

15 ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்தவேண்டும்

இந்திய இரயில்வேக்களை நவீன முறையில் திருத்தியமைத்து வளர்ச்சியுறச் செய்வதற்காக இந்தியாவுக்கு மேலும் 9 கோடி டாலர் கடன்தர உலக பாங்கி முடிவு செய்திருக்கிறது. பல்வேறு செலாவணிகளில் இக்கடன்கள் இந்தியாவுக்குக் கிடைக்கும். இந்தக் கடனை 15 ஆண்டுக் காலத் தவணைகளில் இந்தியா, திருப்பிச் செலுத்திவிட வேண்டும்.

இக்கடன் தொகைகளைக் கொண்டு 500 எஞ்சின்கள், 10,000 வாகன்கள், தண்டவாளங்கள், மற்றும் இன்றியமையாத சில சாமான்கள் வாங்கப்படும்.

அதிகாரிகளின் சோம்பேறித்தனம்!

இராணுவத்தின் நடவடிக்கை

ஜகார்தா, ஜூலை 15—

அலுவலகம் துவங்கி பதினைந்து நிமிடம் ஆகிவிட்ட பின்னரும் வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த சர்க்கார் அதிகாரிகள் பலரை இந்தோனேஷிய இராணுவப் போலீசார் பிடித்து இராணுவ முகாமுக்கு இழுத்துச் சென்று, அலுவலகத்திற்குக் குறித்த நேரத்தில் செல்லவேண்டிய அவசியம் குறித்து பாடம் போதித்து, அலுவலகத்தில் கொண்டு போய்விட்டிருக்கின்றனர்!

கடந்த வாரமும் இதுபோல, அலுவலக நேரத்தில் ஓட்டல்களில் கூடி கும்மாளமடித்துக் கொண்டிருந்த அதிகாரிகளை வளைத்துக்கொண்டு, அவர்களுக்கும் அலுவலகத்திற்கு குறித்த நேரத்தில் செல்லுமாறு பாடம் போதித்து அனுப்பியுள்ளனர்!

25,000 நகரசபை ஊழியர்களின் ஒருநாள் வேலை நிறுத்தம்

பம்பாய், ஜூலை, 15—

பம்பாய் நகரசபையின் நகர சுத்தி, தண்ணீர் சப்ளை, மருத்துவத்துறைகளில் வேலைசெய்யும் 25,000 தொழிலாளர்கள், 13-ந் தேதியன்று ஒருநாள் திடீர் வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்த வேலை நிறுத்தத்தை சோஷலிஸ்டு கட்சி ஆதிக்கத்தில் உள்ள நகர சபை தொழிலாளர் சங்கத்தவர் முன்னின்று நடத்தியிருக்கின்றனர்.

சங்கத்திற்கும்—நிர்வாகத்திற்குமிடையே கடந்த ஜூன் 24-ந் தேதியன்று ஏற்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தை நகர மன்றத் தலைவரும், கமிஷனரும் மீறுவதற்கு முயற்சிப்பதாகவும், அதனாலேயே இந்த வேலை நிறுத்தம் என்றும் சங்கத்தவர் கூறுகின்றனர்.

5-இலட்சம் மத்திய அரசாங்க ஊழியர்கள்

காலவரையறையின்றி வேலை நிறுத்தம் செய்வர்

தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், ஆக. 8-ந்தேதி நள்ளிரவிலிருந்து காலவரையறையின்றி இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த சுமார் 5-இலட்சம் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வர். ஊதியக் குழு அமைக்க வேண்டுமென்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

இலங்கைக் குடியுரிமை

1,71,589 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டனவாம்!

கொழும்பு, ஜூலை 15—

மற்ற எல்லா ஆண்டுகளையும் விட 1956ல் இந்தியர்களின் குடியுரிமை மனுக்களைப் பரிசீலனை செய்யும் வேலை மிகவும் துரிதமாக நடைபெற்றது என்று இலங்கை அரசாங்க அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

குடியுரிமை கோரி சுமார் 2,37,034 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன; 1956-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 1,71,589 மனுக்களைப் பரிசீலனை செய்யும் வேலை முடிவடைந்தது; அவற்றில் 15,184 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன; ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களில் 55,155 பேர் ஈடுபட்டுள்ளனர்.

1948-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து 1957 வரை குடியுரிமை மனுக்களை பரிசீலனை செய்வதற்கு ரூ. 1,22,43,808 செலவிடப்பட்டுள்ளது. அக்கணக்குப்படி ஒவ்வொரு மனுவிற்கும் ரூ. 52 வீதம் செலவிடப்பட்டுள்ளது.

தேர்தல் வழக்கு நிதிச் சிறப்புக் கூட்டம்

ஏ. கோவிந்தசாமி தலைமையில் அண்ணா, மற்றும் முன்னணி வீரர்கள் முழக்கம்

சென்னை, ஜூலை 15—

13—7—57 மாலை 6-30 மணியளவில், சென்னை கோகலே மண்டபத்தில், எழும்பூர் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்காக ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான கழகத் தோழர்களும், பொதுமக்களும், பெண்களும் திரண்டிருந்தனர்

கூட்டத்தில் **அண்ணா** அவர்களும், மற்றும் தோழர்கள் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ., மு. கருணாநிதி எம்.எல்.ஏ., ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

இச்சிறப்புக் கூட்டத்திற்கு தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமை வகித்தார்; அவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், சென்னை மாநில வரவு-செலவுத் திட்டத்தை சட்டமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசினார். அவருடைய வாயாலேயே வடநாட்டார் தென்னாட்டை எந்த அளவுக்கு ஒதுக்கி வருகிறார்கள் என்பதை சொல்லக் கேட்டோம். நாம் இதற்கு முன்பு வெளியிலே, வடநாட்டார் நம்முடைய தென்னாட்டை எந்த அளவுக்கு ஒதுக்கி வருகிறார்கள் என்பதை தெளிவாகவே சொல்லி வந்தோம். அப்பொழுதெல்லாம் அமைச்சர்கள் கவனிக்கவில்லை என்றாலும், இப்பொழுது நம்முடைய கழக எம்.எல்,ஏ.க்கள் சட்டமன்றத்தில் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் வடநாடு—தென்னாடு பிரச்சினையை எழுப்பி வருகிறார்கள்; அதனால் அமைச்சர்களாலும் நம் கழகத் தோழர்களின் பேச்சை மறைக்க முடியவில்லை. ஆனால் நம் கழக எம்.எல்.ஏ.க்களின் சட்டமன்றப் பேச்சுக்கு எங்கே ஆதரவு பெருகி விடுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டு, 'இம்மாதிரிப் பேச்சுக்களை மேடையில் வைத்துக் கொள்ளுங்கள்' என்று கிண்டலாகவும் — கேலியாகவும் பேசுகிறார்கள். நாம் பேசும்போது மந்திரிகள் அச்சப்படுகிறார்கள்; நம்முடைய கழக எம்.எல்.ஏ.க்களைக் கண்டாலே அவர்களுக்கு அச்சமேற்படுகிறது. மற்ற எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; அவர்களைப் போல நாமும் பேசுகிறோம். நம்முடைய பிரச்சினைகளைப் பற்றித் தெளிவாகத்தான் பேசுகிறோம். இருந்தும் அவர்கள் நம்மைக் கண்டு அச்சப்படுவதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை.

"காங்கிரஸ் உறுப்பினர்களும் முதலில் பேச ஆரம்பித்ததும், மந்திரிகளைப் பாராட்டி, பின்னர் நம்மைத் தாக்கிப் பேசிவிட்டு, கடைசியில் நாட்டு நிலைமைகளைப் பற்றி பேசும்போது ஒப்பாரியே வைத்துவிடுகிறார்கள்."

தலைவர் அவர்கள் மேலும் பேசுகையில், சட்டமன்றத்தில் அமைச்சர்கள் எப்பிரச்சினையிலும் நமது தோழர்கள் கூறும் கருத்துக்களை கவனித்துப் பார்ப்பதும், நம்முடைய ஆதரவை எதிர்நோக்குவதும், சட்டமன்றத்தில் நாம் பெற்றிருக்கும் வலிமையையும் விளக்கினார்.

மு. கருணாநிதி

அடுத்து, தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாம் சட்ட மன்றம் சென்ற பிறகு பொதுமக்கள் நம்மைப் பற்றி நினைத்தது, 'நம்மால் அனுப்பிவைக்கப்பட்ட நம்முடைய தூதுவர்கள் திராவிட நாட்டின் விடுதலையைப் பற்றி பேசுகிறார்கள்; நமது தாயகத்தின் விடுதலையைப் பற்றி சட்டமன்றத்திலே பேசுகிறார்கள்' என்று, நாம் சட்டமன்றத்தில் பேசுவதை எண்ணிப் பூரிப்படைகிறார்கள். அதேபோலத்தான் நாம் சட்ட மன்றத்திற்குச் சென்ற பிறகு, சட்டமன்றத்திலே நாம் நடந்துகொள்ளும் முறைகளுக்கு, தென்னகத்திலே மட்டுமல்ல—இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் பாராட்டு கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

"நாம் சட்டமன்றத்தில் ஒவ்வொரு முறையும், 'தெற்கு தேய்கிறது; வடக்கு வாழ்கிறது' என்ற உண்மையை எடுத்துக்காட்டி வருகிறோம். நாம் அப்படி 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது' என்பதை அடிக்கடி எடுத்துக் காட்டி வருவதால்தான், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்கூட, நாம் அவ்வாறு வடக்கு—தெற்கு என்று பேசுவதை ஒரு பத்தாண்டுகளுக்கு நிறுத்திக் கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டார். அதற்கு அண்ணா அவர்களே நல்ல பதிலை சொல்லிவருகிறார்கள்.

"நான் சட்டமன்றத்தில் பேசும்போது, 'செந்திரி சிறக்கிறது வடக்கே — முந்திரியும் சிதைகிறது தெற்கே!' என்ற— தேர்தலின்போது சுவரொட்டிகள் மூலமாக நாட்டு நிலையை படம் பிடித்துக் காட்டிய அவ்வாசகங்களை சுட்டிக் காட்டினேன். அதற்கு அமைச்சர் கக்கன் அவர்கள், தமிழகத்தின் இரு இடங்களில் சில முந்திரித் தோட்டங்கள் பயிரிடப் போவதாகச் சொல்லி, 'இனியாவது வடக்கு —தெற்கு என்று பேசுவதை நிறுத்திக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்' என்றார். நாம் வாய்ப்புக் கிடைக்கும்போது 'வடக்கு—தெற்கு' பிரச்சினையை எடுத்துக்காட்டி வருகிறோம்; அமைச்சர்கள் அதற்குப் பதிலளிப்பதாக எண்ணிக் கொண்டு சுமார் 40 தடவையாவது 'வடக்கு —தெற்கு' என்று பேசுகிறார்கள். நாம் இவ்வாறு எடுத்துக்காட்டவில்லையென்றால், மந்திரிகள் அதைப்பற்றி நினைக்கவேமாட்டார்களே! இத்தனை நாட்களாக தெருவின் முனைகளில் நின்று எத்தனையோ முறை சொல்லி வந்தோம்—அப்பொழுது அமைச்சர்களுக்கு நமது குரல் காதில் விழவில்லை! இப்பொழுது கோட்டைக் கதவைத் தட்டி—மந்திரிகளை எழுப்பி, 'வடக்கு—தெற்கு' என்ற குரல் எழுப்பி வருகிறோம்; எனவேதான், அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள்!

"சட்டமன்றத்தில் நிதியமைச்சர் அவர்கள், சென்னை மாநிலத்தின் நிதி நிலை அறிக்கையின் வாக்கிய முடிவில், 'நம்புவோமாக! சமாளித்துக் கொள்வோமாக!' என்று முடித்தார். இவ்வாறு 'சமாளித்துக் கொள்வோமாக!' என்று கூறுவது, நல்ல ஒரு நாட்டிற்கு நிதியமைச்சராக இருப்பதற்குப் பொருளுமல்ல—அழகுமல்ல! ஒரு கொடியவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி, பக்கத்து வீட்டுக்காரியிடம், 'என்ன செய்வது? அடித்தாலும் அணைத்தாலும் அவன்தானே கணவன்?' என்று கூறுவதுபோல், வடநாட்டாரின் கொடுமைக்கு ஆளாகிவிட்ட நமது மாநில நிதியமைச்சர், 'என்ன செய்வது? அடித்தாலும் அணைத்தாலும் வடநாட்டார்தானே நம் கணவர்!' என்று, பேசுகிறார். இதை நாம் எடுத்துக்காட்டி ஒரு பத்து தடவை 'வடநாடு—தென்னாடு' என்று குறிப்பிட்டால் போதும்-உடனே அவர் 'அதை மேடையிலே தேர்தல் காலத்திலே பேசுங்கள்' என்று கூறுகிறார்.

"நாம் இரண்டு இடங்களிலும் ஒரேமாதிரியாகத்தான் பேசுகிறோம். ஆனால் அமைச்சர்கள்தான் சட்டமன்றத்திலே எப்படிப் பேசுகிறார்களோ அதையே மேடைப் பேச்சிலேயும் பேசிவிடுகிறார்கள்! நாம் மேடையில் எந்த உண்மையைப் பேசுகிறோமோ அதையே சட்டசபையிலும் பேசுகிறோம். அமைச்சர்கள் சட்டமன்றத்திலே எவற்றையெல்லாம் மறைத்துப் பேசுகிறார்களோ அதையே பொது மேடையிலும் பேசுகிறார்கள்.

"நாங்கள் எங்களுடைய அடிப்படை இலட்சியத்திற்காக—திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்க் கொள்கைகளுக்காக—திராவிட நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடத்தான் அங்கே அமர்ந்திருக்கிறோமே தவிர 'கிடைத்த இப்பதவி நமக்கு கிடைத்தற்கரிய பெரும்பேறு,' என்ற எண்ணத்திலே அங்கே அமர்ந்திருக்கவில்லை.

"எங்களுடைய பேச்சில் உணர்ச்சி யிருக்கிறது; எனவேதான் அமைச்சர் நம்மைப் பார்த்து, 'மேடைப் பேச்சு பேசாதே' என்று அவர்கள் பேசும் 'கூடைப் பேச்சை' பேசச் சொல்கிறார். அவர்கள் பேசும் கூடைப் பேச்சு என்பதற்கு என்ன பொருள் என்பதை சொல்லத் தேவையில்லை; நீங்களே அறிவீர்கள். நாம் அடுக்குமொழி பேசுகிறோம் என்ற பொறாமையால் 'உங்களுக்குத்தான் அடுக்குமொழி பேசத் தெரியுமா,' என்று, 'அண்டா—குண்டா,' 'கோச் பேக்டரி—மேச் பேக்டரி,' என்று உளறிக் கொட்டும் ஐந்தாறு பேர்களை கொண்டுவந்து நிறுத்துகிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், 'கானமயிலாட கண்டிருந்த வான்கோழி—தானும் தன் பொல்லாச்

(4-ம் பக்கம் பார்க்க.)

கேரள மாநில தி. மு. கழகக் கிளை துவக்க விழா

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நிர்வாகிகள் தேர்வு

கேரள மக்களுக்கு அன்பழைப்பு விடுத்துத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்ட விவரம்

பாலக்காடு, ஜூலை 15—

30—6—57 அன்று பாலக்காடு நகர தி. மு. கழக அலுவலகத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தோழர் டி. வி. நாராயணசாமி முன்னிலையில் கேரள தி. மு. கழகக் கிளைக் கழகங்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி கேரள மாநில தி. மு. கழகக் குழுவை அமைத்தனர்.

அவ்வமயம், அப்பிரதேசக் குழுவால் தோழர் கே. எச். எம். சுபேர் மாநில தலைமைச் செயலாளராகவும், தோழர் எம். வரதராசன் துணைச் செயலாளராகவும், தோழர் ஆர். கிருஷ்ணன் பொருளாளராகவும், தோழர்கள் வி. கே. சாமி, ஏ. கதிரவன் ஆகியோர் பொதுக் குழு உறுப்பினர்களாகவும், தோழர்கள் கே. ராமகிருஷ்ணன், எம். கே. சுலைமான், ஏ. எம். அனீபா, வி. சீவாசு, ஏ. அருணாசலம், சுப்பிரமணியம், ஆர். சண்முகம், கலையழகன், ஆர். வியோன் ஆகியோர் குழுவின் அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :—

1. திராவிட இனத்தில் ஒரு பிரிவினரான கேரள மக்கள் மற்ற திராவிட சகோதர இனத்தவர்களோடு இணைந்து தோளோடு தோள் நின்று, வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து அரசியல்—சமூக—பொருளாதாரத் துறையில் தென்னாடு விடுதலை பெற, திராவிட குடியரசுகளில் ஒன்றாகத் திகழ 'திராவிட நாடு, திராவிடருக்கே' என்ற இலட்சியக் குரலை ஏற்று செயலாற்றும்படி கேரள மக்களுக்கு அழைப்பு விடுத்தும்;

2. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்குரிய பங்கை அளிக்காமல் பெரும் அளவில் வஞ்சிக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்து அதற்குரிய பங்கைப் பெற தென்னாட்டு மக்களில் ஒரு பிரிவினரான கேரளத்து மக்கள், கேரள திராவிட முன்னேற்றக் கழகத்தின்கீழ் ஒன்றுகூடி செயலாற்றும்படி கேட்டுக்கொண்டும்;

3. ஏற்கனவே காங்கிரசின் பத்தாண்டு ஆட்சியினால் பாதிக்கப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும், விலைவாசியும் வாட்டிக்கொண்டிருக்கும் கேரள மாநிலத்தில், மத்திய அரசாங்கத்தின் அதிகப்படியான புதிய வரித் திட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டுவதோடல்லாமல், வசூலிக்கப்படும் வரிகளால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் அனைத்தும் வடநாட்டில் இருப்பதால் இதனால் திராவிடத்தின் எந்தப் பகுதிக்கும் குறிப்பாக கேரளத்திற்கும் யாதொரு பயனுமில்லை என்பதையும் எடுத்துக்காட்டிக் கண்டித்தும்;

4. அடுத்த கேரளப் பிரதேச தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் வண்டிப்பெரியாரில் கூடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானவிவரம் :—

கேரளப் பிரதேசத்தில் தி. மு. கழகம் மக்களுக்கு நல்ல முறையில் செயலாற்றவும், செயலாற்றுவதற்குப் போதுமான நிதி வசதி பெறவும், கலையோடு கொள்கையையும் கலந்தூட்டவும் கேரள மாநில தி. மு. க. நாடகக் குழு ஒன்று அமைக்கப்படவும், அதற்கு மற்ற எல்லா திராவிடத்தின் பகுதியினரும் தக்க ஆதரவு நல்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடகக் குழு தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள் கலையின் அவசியத்தையும், கலையின் மூலமாகக் கொள்கைகளை மிகவாக சாதிக்கமுடியும் என்பதையும், கலையை மேற்கொள்ளுபவர்கள் ஆரம்பத்தில் கடைபிடிக்கவேண்டிய வழிகளைப்பற்றியும் உரை ஆற்றினார்.

பொதுக்கூட்டம்

மாலை சுமார் $5\frac{1}{2}$ மணிக்கு கேரள மாநில தி. மு. க. அமைப்பு விழாவையொட்டி பொதுக்கூட்டம் ஒன்று மாநிலச் செயலாளர் தோழர் கே. எச். எம். சுபேர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'திராவிடம் ஏன் பிரியவேண்டும்? அதனால் என்னென்ன நன்மைகள்? அப்படிப் பிரிந்தால் திராவிட இனங்கள் எப்படி இணைந்து திராவிட கூட்டாட்சியாக வாழும்?'—என்பதை விளக்கியும், அதற்கான கேரள மக்களின் பொறுப்பு என்ன என்பதை உணர்த்தியும் கொட்டும் மழையிலும் கட்டுப்பாடாக நின்று கேட்ட மக்களுக்கு உணர்த்தினார்.

மற்றும் தோழர்கள் டி. வி. நாராயணசாமி, கோவை-இராமநாதன் முதலியோர் பேசினர்.

சென்னை 42-வது வட்ட இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா

அண்ணா, கா. அப்பாதுரையார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொண்டனர்

சென்னை, ஜூலை 13—

9—6—57 அன்று மாலை சென்னை— திருவல்லிக்கேணி, சேக்தாவுது தெருவில், ('ஐஸ் அவுஸ்' அருகில்) இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கழகத்தை அண்ணா அவர்கள் திறந்துவைத்து அரியதோர் கருத்துரை வழங்கினார்.

விழாவில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்களும், தோழியர் அலமேலு அப்பாதுரையார் அவர்களும் கலந்துக் கொண்டனர்.

பெருத்த மழையின் காரணமாக விழாவிற்கு சிறிது தொல்லை நேர்ந்தாலும், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அம்மழையையும் பொருட்படுத்தாது நனைந்துகொண்டே விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக் கொண்ட பெருமைக்கும்—சிறப்புக்கும்உரியதாகும்.

விழாத் துவக்கத்தில் தோழர் டேப்-இராதாமாணிக்கம் இயக்கப் பாடல்கள் பாடினார்.

விழாவிற்கு வந்திருந்த எல்லோரையும் கழகச் செயலாளர் வரவேற்று, அந்நாளை நமது இயக்கத்திற்குள்ள வளர்ச்சி நிலையை எடுத்துக் காட்டினார்.

தோழியர் அலமேலு அப்பாதுரையவர்கள் மழையை பொருட்படுத்தாது கட்டுப்பாடாக நின்ற மக்களுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

தலைவர் தனது முன்னுரையில்,இம்மாதிரியான கழகங்களின் தேவையை விளக்கி மக்களுக்கு அதன் கொள்கையை உணர்த்தி சிறிது நேரம் பேசினார்.

பின்னர், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பெருமழையின் காரணமாக தாம் பேசுவதற்கில்லா நிலையைக் கூறி, அண்ணா அவர்களை பேசும்படி கேட்டுக் கொண்டுவிட்டு முடித்துக் கொண்டார்.

இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள் சிறந்த ஓர் நல்லுரை வழங்கியபின் நன்றிகூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

அண்ணா அவர்களுக்கு பல கிளைகளின் சார்பிலும் தனிப்பட்டோர் சார்பிலும் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும், எச. ஜே. லாஸ்கி, சர்வால்டர் ஸ்காட் ஆகியோரின் இரு ஆங்கிலப் புத்தகங்களும் அன்பளிப்பாகத் தரப்பட்டன.

முகவரி
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
128, சவுத் அவின்யூ, புதுடில்லி
E. V. K. Sampath M.P.
128, South Avenue
NEW DELHI

தூத்துக்குடி ஆலைத் தகராறு

சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

தூத்துக்குடி, ஜூலை 14—

14—7—57 மாலை 6 மணிக்கு தூத்துக்குடி ஆலைத் தொழிலாளர் சங்கக் கட்டிடத்தில், சங்கத் தலைவர் எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:—

நேற்றும் இன்றும் கேட்ட விளக்கங்களுக்கு ஆலை நிர்வாகிகள் தரும் பதில்களைப் பற்றியும், மதுரை ஆலை திறக்கப்பட்ட அடிப்படை பற்றியும், நிர்வாகிகள் ஆலையைத் திறப்பதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை என்றும், சங்க நிர்வாகக் குழுவினர் திட்ட வட்டமான முடிவு செய்து தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் தெரியப்படுத்திவிட வேண்டும் என்றும் சங்கப் பொதுக் காரியதரிசி 'ரிபோர்ட்' தந்தார். அதைப் பதிவு செய்துகொண்டு (15-7-57) மாலையுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துவிடவேண்டும் என்றும், பேசிய இலாகாக்கள் சம்பந்தமாக இறுதி முடிவுகளை (16-7-57) பகல் 1 மணிக்குள் தெரியப்படுத்திவிடவேண்டும் என்பதை நாளையே நிர்வாகிகளுக்குத் தெரியப்படுத்திவிடவேண்டும் என்றும், நிர்வாகிகள் தரும் பதிலை செவ்வாய் மாலை 5 மணிக்கு சங்க நிர்வாகக் குழுவை கூட்டி அதில் தீர்மானித்து, (17-7-57)ல் ஆலையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், சமரசத்திற்குரிய பதில்களை நிர்வாகிகள் தரவில்லை என்றால் தொழிலாளர்களை கொண்டு தீவிரக் கிளர்ச்சிக்கு தயாராக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மத்திய சர்க்கார் ஊழியர்களை உள்நாட்டு மந்திரி மிரட்டுகிறார்

வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து விவாதிக்க மறுப்பு

புதுடில்லி, ஜூலை 15—

வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ள மத்திய சர்க்கார் ஊழியர்களை உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் எச்சரித்திருக்கிறாராம்!

'ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால், அது, உற்பத்திப் பெருக்கத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதோடு, தனது ஊழியர்களுக்குச் செய்ய வேண்டுமென சர்க்கார் விரும்பும் சில நன்மைகளுக்கும் தீங்கு பயப்பதாகும்' என்றும் அவர் கூறினாராம்!

'டெல்லி சர்க்காரின் பலதுறை ஊழியர்களும் வேலைநிறுத்த அறிவிப்பு செய்திருப்பதால் அது குறித்து விவாதிக்க வேண்டும்' என்று கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புப் பிரரேபணைகளை மக்கள் சபைத் தலைவர் நிராகரித்திருக்கிறார்.

தபால் ஊழியர் வேலைநிறுத்தம் பற்றி மந்திரி லால்பகதூர் சாஸ்திரி, இன்னும் இரண்டொரு நாட்களில் அறிக்கை தருவதாகக் கூறியிருக்கிறார்.

தபால் ஊழியர் வேலைநிறுத்தம்

சர்க்காரிடம் 'நோட்டீஸ்' தாக்கல்

புதுடில்லி, ஜூலை 15—

தபால், தந்தி இலாகா ஊழியர் சங்கத்தவர், தங்களின் கோரிக்கைகளுக்கு, வரும் ஆகஸ்டு முதல் தேதிக்குள் சர்க்கார் இணங்காவிடில், ஆகஸ்டு 9-ந் தேதி முதல் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று, 14 நாள் தவணை கொடுத்து சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளது என்று தெரியவருகிறது.

சென்னைக்கு டில்லி கைவிரிப்பு

சட்டசபையில் அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 16—

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் மொத்தம் 4,407 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் மத்திய அரசாங்கம் இதுவரையில் இத்துறையில் சென்னை மாநிலத்திற்குப் பணம் ஒதுக்காத காரணத்தால், இரண்டாவது திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் மேலும் ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்படமாட்டாது என்றும் சட்ட சபையில் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எஸ். எம். அண்ணாமலை:— "வட ஆற்காடு மாவட்டத்தில் பல ஓராசிரியர் பள்ளிகள் மூடப்பட்டுள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா?"

அமைச்சர்:—'தனிக் கேள்வி கேட்க வேண்டும்."

செய்தது இதுதான்!

சென்னை, ஜூலை 16—

இதுவரையில் எந்தச் சிறு துறைமுகத்தையும், நல்ல துறைமுகமாக மாற்றுவதற்கு முயற்சி செய்யவில்லையாம்!

தூத்துக்குடி துறைமுகத்தை சீர்படுத்துவது மத்திய அரசாங்கத்தின் கவனத்தில் உள்ளதாம்.

சட்ட சபையில் கேள்வி நேரத்தின்போது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தேர்தல் வழக்கு நிதிச் சிறப்புக் கூட்டம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிறகை விரித்தாடினாற்போல்,' என்ற பாடலின் பொருளைதான் தான் அவர்களைப்பற்றி உணர்த்துகிறது. பாரதக் கதையில் குந்திதேவிக்கு ஐந்து குழந்தைகள் பிறந்திருக்கின்றன என்று கேள்வியுற்றதும் பொறாமைப்பட்ட காந்தாரி, அவளுக்கு ஐந்துகுழந்தைகளா? என்று பொறுக்கமாட்டாமல் குழவிக்கல்லால் தன் வயிற்றில் அடித்துக்கொண்டாளாம்! அதைப்போல காங்கிரசில் உள்ள சில 'காந்தாரி'கள் நாம் அடுக்குத் தொடர் பேசுவதைக் கண்டு, பொறாமைப்பட்டு எதை எதையோ பேசுகிறார்கள்.

"கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பள உயர்வு பிரச்சினையைப் பற்றி நமது கழக உறுப்பினர் பேசியது கண்டு பொறாமைப்பட்ட காங்கிரஸ் கட்சிக் கொறடா—தோழர் கருத்திருமன் அவர்கள், 'என்ன, அவர்கள் எதற்கெடுத்தாலும் கதை சொல்லி உதாரணம் காட்டுகிறார்களே' என்று எண்ணிக்கொண்டு, கிராம உத்தியோகஸ்தர்களை காக்கைகளாகவும், அவர்களின் சம்பள உயர்வை, காக்கை திருடிக்கொண்டு சென்ற வடையாகவும் சித்தரித்துக்காட்டினார். அவர் அவ்வாறு பேசியது பொருத்தமா என்பதைவிட, கிராம உத்தியோகஸ்தர்கள் பெற்ற சம்பள உயர்வு காக்கையிடமிருக்கும் திருட்டு வடை என ஒப்பிடுகிறாரே அது சரியா?—அது திருட்டுவடைதானா?—என்பதற்கு கிராம அதிகாரிகளே பதிலளிக்கப்போகிறார்கள்!"

மேலும், தோழர் கருணாநிதி அவர்கள் பேசுகையில், சட்டமன்றத்தில் தான் புள்ளி விவரத்தோடு நீர்ப்பாசனத் திட்டத்திலுள்ள குறைகளை எடுத்துக்காட்டியதையும், அதற்கு அமைச்சர்கள் தரும் பொருந்தா பதிலையும், விளக்கி சட்டமன்றத்தில் ஆற்றும் பணிகளையும் எடுத்துக்காட்டி விளக்கினார்.

★

க. அன்பழகன்

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழகத்தில் சராசரி வருமானம் ரூ. 260-ஆக இருக்கிறது; கேரளத்தில் சராசரி வருமானம் ரூ. 350-ஆக இருக்கிறது. எனவே, கேரளத்தைவிட தமிழ் நாடு மிகவும் தாழ்ந்திருக்கிறது. 'தமிழ் நாடு முன்னேறத்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்' என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள். ஆனால், நாம் 'ஐந்தாண்டுத் திட்டங்களில் பெரும் பெரும் அணைக்கட்டுகளெல்லாம் வடக்கிலேதானே உருவாகின்றன; தமிழகத்தில் ஒன்றும் இல்லையே' என்றால், 'வடக்கிலேதான் அதிக நீர்வளம் இருக்கிறது; பெரிய நதிகள் எல்லாம் அங்குதானே இருக்கிறது' என்கிறார்கள்.

"தமிழ் நாட்டில் சிறுசிறு நீர்ப்பாசனங்கள் தான் இருக்கின்றன; இங்குள்ள சிறு நீர்ப்பாசனத் திட்டத்தால் நாட்டில் பெரிய வளர்ச்சியைக் காண முடியாது.

"தமிழ் நாட்டின் நிலை தாழ்ந்திருக்கிறது; விவசாயம் மோசமாக இருக்கிறது. இவ்வளவு குறையுடைய நாடு முன்னேறுவதற்கு வழி தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் பெருக வேண்டும். தொழிற்சாலைகளைப் பெருக்கினால்தான் நாடு முன்னேறும் என்பதை அறிந்திருக்கிற அமைச்சர்கள், அவை பெருகுவதற்கான திட்டங்களை, ஐந்தாண்டுத் திட்டங்களைப் போடுவதற்கு முன்னரே போட்டிருக்கவேண்டும். நெய்வேலி நிலக்கரியையும், சேலத்துக் கனிப் பொருள்களையும் பயன்படுத்தியிருக்கவேண்டும். இதையெல்லாம் செய்யாமல் இருந்தால் போதிய விவசாயமில்லாத நாடு முன்னேற முடியுமா?

"போதிய விவசாயமில்லாத நாட்டில் தொழிற்சாலைகள்தான் பெருகவேண்டும்; அதை பெருக்க வேண்டுமென்றால் மத்திய சர்க்காரிடம் பணம் கேட்கவேண்டும்; தொழிற்சாலைகளின் தேவையை வலியுறுத்தவேண்டும்; இந்த அமைச்சர்கள் அதை இதுவரை வலியுறுத்தவில்லை. எல்லாத் துறைகளுக்கும் வடநாட்டு சர்க்காரையே எதிர்பார்க்கவேண்டிய நிலையிலிருக்கும் இந்த அமைச்சர்கள் வலியுறுத்தவில்லையென்றால் இந்த நாட்டின் சராசரி வருமானம் எப்படி உயரும்? அந்தவகையிலே இந்த மாநில வரவு-செலவுத் திட்டம் வந்ததை நம்மால் பாராட்ட முடியாது—வருத்தப்படத்தான் வேண்டியிருக்கிறது."

மேலும் தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில், தி. மு. கழகத்தின் வளர்ச்சி குறித்தும் சட்டமன்றத்தில் அது ஆற்றும் பணி குறித்தும் விளக்கியதோடு, எழும்பூர் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

★

அண்ணா

இறுதியாக அண்ணா அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் புள்ளிவிவரம் என்பது குழந்தைப் பருவத்திலிருப்பதையும், அதை மட்டும் நம்பி யிருக்கும் சர்க்கார் நிலையையும், சட்டமன்றத்தில், கழகத்தை, தன் கோரிக்கையை 10-ஆண்டு தள்ளிவைக்கக்கோரிய நிதியமைச்சரைப்பற்றி 'அமிர்த பஜார்' என்ற பத்திரிகை எழுதியிருப்பதையும், வடநாட்டார் கொண்டுள்ள ஆதிபத்திய மனோபாவத்தையும் விளக்கி அரிய கருத்துரை வழங்கினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. நி.)

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு

இரா. நெடுஞ்செழியன் தேர்தல் வழக்கு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது

காங்கிரஸ் தோழரின் ஆட்சேபம் நிராகரிக்கப்பட்டது

வேலூர், ஜூலை 13—

"தேர்தல் போட்டியிலிருந்து விலகிக்கொண்ட மற்ற இருவரையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்படாததால் தேர்தல் ஆட்சேப மனுவைத் தள்ளிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்வது ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை. மேலும் திரு. நெடுஞ்செழியன் தாக்கல் செய்துள்ள தேர்தல் மனுவில் தேர்தலின்போது பல முறை தவறான செயல்கள் நடைபெற்றன என்றும் கூறப்பட்டுள்ளது. வாதிகூறும் வாதத்தை ஏற்றுக்கொண்டு தேர்தல் மனுவை நிராகரித்தால் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே, வாதியின் தரப்பில் கூறப்பட்ட ஆட்சேபத்தை நிராகரித்து தேர்தல் மனுவை அனுமதிக்கிறேன்"

என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சேலம் தொகுதி தேர்தல் வழக்கு மனுவை காங்கிரஸ் தோழர் ஏ. மாரியப்பன் அவர்கள் ஆட்சேபித்ததை நிராகரித்து நீதிபதி கே. எஸ். வெங்கட்ராமன் அவர்கள் தீர்ப்பளித்தார்.

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு இன்று ஆரம்ப விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு தொடர்ந்து நடைபெறும்.

திராவிடப் பிரிவினை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவைத் தலைவர் அனுமதிக்க மறுத்தும், நிதி அமைச்சர் தனிப்பட்ட முறையில் விளக்கம் தர விரும்பினர்; சபைத் தலைவரும் அனுமதித்தார்.

நிதி அமைச்சர் பதிலளிக்கையில், குறிப்பிட்டதாவது:—

"நாடு பிரிவினைக் கிளர்ச்சியை அரசாங்கம் வெறுமனே பார்த்துக்கொண்டு இருக்காது. எதிர்காலத்திலும் அரசாங்கம் சும்மா இருக்காது; பிரிவினைக் கூச்சல் அர்த்தமற்றது. காங்கிரஸ் கொள்கைக்கும், அரசாங்கக் கொள்கைக்கும் ஏற்றவாறு இந்த 'நாசக் கூட்ட'த்திற்கு வேண்டுகோள் விடுவதில் தவறில்லை.

உடனே தி.மு.க. சட்டசபைக் கட்சி செயலாளர் அவர்கள்,

"நிதி அமைச்சர் தி. மு. கழகத்தை ஒரு 'நாசக் கூட்டம்' என்று வர்ணிப்பது, சட்ட மன்ற விதிகளுக்கு ஏற்றதுதானா?"

என்று கேட்டு, 'அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்' என்று கூறினார்.

மேலும் இதுபற்றிய விவாதத்திற்கு சபைத் தலைவர், அனுமதி தர மறுத்துவிட்டார்.

கழகக் கூட்டம்

★

செயங்கொண்டம்:

காந்தித் திடலில்

18—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர்: அ. மேத்துசலா

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

போன். தருமன்

புலவர் ஆறுமுகம்

பாடல்கள்:

தோழியர் பா. கருணாநிதி

அரசாங்கம் காட்டும் 'சலுகை' யாருக்குக் கிடைக்கிறது?

சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜூலை 16—

இராசிபுரம் தாலுகா காங்கிரஸ் தியாகிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அச்சிடப்பட்ட கையொப்பமில்லாத நகல் மட்டும் அரசாங்கத்திற்குக் கிடைத்ததென்றும், தியாகிகள் தனித்தனியே எழுதினால் வேண்டிய உதவி செய்யப்படும் என்றும் சட்டசபையில் ரெவினியூ அமைச்சர் தெரிவித்தார்.

"முன்பு வீரத்திற்கு மதிப்பு கொடுத்து பணக்காரர்களுக்கும் 'தியாகிகள்' என்ற பெயரால் உதவி செய்யப்பட்டது; இப்போது ஏழைகளுக்கே உதவி செய்யப்படுகிறது" என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டு, 'வைக்கம் வீரர் என்று பெயர் பெற்ற பெரியாருக்கு ஏன் 'தியாகி'களுக்குத் தரப்பட்ட சலுகைகள் தரப்படவில்லை?' என்று கேள்வி எழுப்பினார்.

"நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அனைவருக்கும், அவர்கள் இப்போது எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்கள் ஏழையாக இருந்தால் உதவி அளிக்கப்படுகிறது" என்று நிதி அமைச்சர் குறுக்கிட்டுக் கூறினார்.

"இப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் இராஜாராம் நாயுடு மற்றும் பழனிசாமி கவுண்டர் ஆகிய பெரிய பணக்காரர்களுக்குக்கூட உதவி செய்யப்பட்டதே?" என்று தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டதற்கு, அமைச்சர், 'இனிமேல் அப்படி நடக்காது' என்று கூறினார்.

காங். சீர்திருத்தக் கட்சி வெளிநடப்பு

சென்னை, ஜூலை 15—

சட்டசபைக் கட்டிடத்தை, மவுண்ட் ரோடிலிருந்து கோட்டைக்கு மாற்றுவது என்ற முடிவை மேற்கொள்ளுமுன் சர்க்கார், எல்லாக் கட்சியினரையும் கலந்தாலோசிக்காத போக்கினைக் கண்டிக்கும் வகையில், காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சி எம்.எல்.ஏ.-க்கள் இன்று சட்டசபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும், சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும் அதுபோது வெளியேறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.